வாழ்தலை அழகாக்கிய பெரியம்மா..

சில இழப்புகள் சில உலுப்பல்களை இதயத்தில் ஏற்படுத்தி மனதோரம் கடும் வலியை ஏற்படுத்தி விடுகின்றன…

அப்படித்தான் பேபி பெரியம்மாவின் இழப்பும்..

என் அப்பாவின் தாய் மாமனின் மகள்—அப்பாவின் 4வது அண்ணனின் மனைவி —எம் அன்புக்குரிய ‘பேபி’ பெரியம்மாவின் இழப்பு நினைவுகளைக் கிளறி வலியைக் கூட்டுகின்றது.

1992 களில் கனடா வருவதற்காக இளம் பெண்ணாக உறவுகளை, ஊரை, நட்புகளை, சுற்றத்தைப் பிரிந்து கனடா வரும் வழியில் சிங்கப்பூரில் நான் வாழ்ந்த ஒரு குறுகிய காலத்தில் (2 வாரங்கள்) என்னுள் இளையோடிய தாயக ஏக்கத்தை, சோகத்தை அன்பான வார்த்தைகளால் போக்கிய அவரின் தாய்மை கலந்த அன்பான கனிந்த பேச்சும், அக்கறையும், அணைத்து கூறிய நம்பிக்கை வார்த்தைகளும்..

“ எல்லாம் நல்லபடி நடந்து நீ நல்ல நிலைக்கு வந்து அப்பா அம்மா தம்பியைக் கனடாவுக்கு கூப்பிடலாமல்லா..

நல்லாப் படிச்சு நல்ல வேலை எடுத்து நல்லா உழைச்சு ஊருக்கும் கொடுக்கலாம்.. ஊருக்கும் அப்புறம் போகலாம்லா”

எனக் கொஞ்சிப் பேசிய நினைவுகள் பல நெஞ்சோரம் நிழலாடுகின்றன.

பின் கனடா வந்தபின்பும் அடிக்கடி தொலைபேசியில் அழைத்து அறிவுரைகள் சொல்லி அன்பு காட்டி வழிநடத்திய கனிந்த அவரின் பாசம்..

என் மூத்த மகள் பிறந்த பின்பு குழந்தையைக் கொண்டு சென்று நேரில் காட்டியபோது ஆசையாக அள்ளி அணைத்துக் கொஞ்சிய பாசம்..

அடிக்கடி தொலைபேசியில் பேசிய பெரியம்மா பின் பேசும் இடைவெளிகள் கூடிக் கூடி ஈற்றில் தொடர்பின்றிப் போனபோது ..

அவரது தள்ளாமை, அதிகரித்து வரும் மறதி பற்றி அண்ணா, அக்காமார் சொன்னபோது எனக்குள் எழுந்த சோகம்..

வருடங்கள் உருண்டோடின ..அவருடன் தொடர்பின்றி..

அவரின் பிள்ளைகள் மூலம் அவ்வப்போது நலம் விசாரிப்பேன்..

அன்று நான் மனம் உடைந்து போயிருந்த நாட்களில் பாசத்தைக் கொட்டிய பெரியம்மாவை நான் "மீண்டும் ஒரு நாள் போய்ப் பார்ப்போம்" என நினைத்துக் காத்திருந்து ஓடிப் போன இக் காலத்தில் ..

பாசமான பேபி பெரியம்மா..மண்ணை விட்டுப் பிரிந்த செய்தி..

நேரில் சந்தித்துப் பழகியதால்த் தான் இந்த பிரிவு வலியா?

சிங்கப்பூரில்  வாழ்ந்தாலும் தாய் மண், தாய் மொழியில் பற்றுக் கொண்டவர் பெரியம்மா!

தாயக உறவுகள் சிங்கப்பூர் வருகையில் உயிர் உருக அன்பு காட்டி அரவணைக்கும் பாசக்காரர்களாகவே வாழ்ந்தார்கள் பெரியப்பாவும் பெரியம்மாவும்!

பண்பாடு, பழக்க வழக்கம், விருந்தோம்பல் என அங்கு வாழ்ந்தாலும் தமிழ் உணர்வும் தாய் மண் பற்றும் மேலோங்கியவர்கள்!

சிங்கப்பூரில் வாழ்ந்து சந்ததியை வழி நடத்திய எம் குடும்பத்தின் மூத்த உறவுகளில் இறுதியாக எமக்கிருந்த பேபிப் பெரியம்மாவையும் இழந்துவிட்டோம் என்ற உணர்வு இன்று மிகவும் வேதனை தருகிறது.

இவ்விழப்பில் தவிக்கும் ஆனந்தி அக்கா குடும்பம், ஜெயந்தி அக்கா, தேவி அக்கா குடும்பம், சிவநேசன் அண்ணா குடும்பம் மற்றும் தாயகத்தில் வாழும் பெரியம்மாவின் தங்கை இராணி அன்ரி குடும்பம், மறைந்த சகோதரர் சிவலிங்கம் மாமா அவர்களின் குடும்பம் மற்றும் உற்றார் உறவினர் அனைவரிற்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றேன்!

ஓம் சாந்தி!